(b) Estimates are under preparation ; and

(c) It is likely to be taken up for execution immediately after estimates are finalised and got sanctioned.

திரு. வி. எஸ். எஸ். மணி : இப்பொழுது நீதி மன்றங்களெல்லாம் மதுரை திருமலை நாயக்கர் மகாலில் வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கிருந்து அவற்றை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டாம் என்று கோரி ஏதாவது ஆட்சேபணை மனு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. செ. மாதவன் : இந்தத் திட்டம் பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்படும் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. இரண்டு மாவட்டங்களினுடைய மாவட்ட நீதிபதிகளும், கலெக்டர்களும் இடத்தைச் சென்று பார்த்துவிட்டு வந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இதிலே காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : புது இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, கட்டடம் கட்டுவதற்கான விவரத்தைத்தான் சொன்னேன். மற்ற விவரங்கள் வேண்டுமானால், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்குத் தனிக் கேள்வி போட்டால், அவர்கள் பதில் சொல்லுவார்கள்.

Inland waterways

* 555 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether the Government have appointed any Committee for a traffic-study of three inland waterways in the State, viz., the Buckingham Canal, the Vedaranyam Canal and the Cooum river ; and

(b) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The Committee consists of the following members :—

1. Chief Engineer (Irrigation).

2. Officer on Special Duty, Tuticorin Area Development Project, Public Works Department.

3. Deputy Secretary to Government (Major Industries), Industries, Labour and Housing Department.

4. State Port Officer.

The Committee's report is awaited.

திரு. கு. ப. அழகமுத்து : இந்தக் கமிட்டி எப்போது அமைக்கப்பட்டது? இந்தக் கமிட்டி தன்னுடைய பணியை முடிப்பதற்கு ஏதாவது காலவரையறை கொடுக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா : இந்தக் கமிட்டியினுடைய வேலை 'ட்ராபிக் சர்வே' செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியது தான். இது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான திட்டம் ஆகையால், இந்த ட்ராபிக் சர்வே வேலை மிக விரைவில் முடியும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்திய சர்க்கார் அமைத்த இங்லண்டு வாட்டர்வேஸ் கமிஷன் கிட்டத்தட்ட பத்து ஆண்டு களுக்கு முன்பே இந்த இடங்களையெல்லாம் எப்படித் திருத்தி யமைப்பது என்று ரிபோர்ட் தந்திருக்கிறது. அதை மாநிலக் கமிட்டி ஆராயப் போகிறதா? அல்லது அந்த ரிப்போர்ட்டைத் தூக்கியெறிந்துவிட்டு, புதிதாக யோசனை தெரிவிப்பதற்காக இந்தக் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா : மத்திய சர்க்கார் கமிட்டி ஒன்றும் கிடையாது. நம்முடைய அரசாங்க உயர்தரக் கமிட்டி வேலை செய்கிறது. வேலையை எடுத்துக்கொள்வதற்கான எஸ்டிமேட் எல்லாம் தயார் செய்திருக்கிறது. அது பெருந்தொகையாக இருக்கிறது. ஆரம்பத்தில் 655 லட்சம் ரூபாய், பிறகு 355 லட்சம் ரூபாய். இந்த அளவு பெருந்தொகையில் ஏற்பாடு செய்யும்போது, அதில் போக்குவரத்து கட்டுபடியாகுமா என்றெல்லாம் பார்க்க வேண்டும். அந்தத் திட்டத்தைக் குறித்து ஒன்றும் பரிசீலனை இல்லை. ட்ராபிக் சர்வே தான் செய்யப்பட்டது.

திரு. இராம. அரங்கண்ணல் : பக்கிங்காம் கால்வாய், கூவம் நதி இரண்டையும் ஒரு கோடி அல்லது ஒன்றரைக் கோடி ரூபாயில் சீர்திருத்திவிடலாம் என்று தெரிவித்த யோசனை இப்பொழுது எப்படி இருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா : ட்ராபிக் சர்வே நடந்துகொண்டிருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து : இந்தக் கமிட்டி விரைவில் தன்னுடைய வேலையை முடிக்கும் என்று கூறுகிறார்கள். நான் காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதை எடுத்துக்கொள்ளுவதற்கு உத்தேசிப்பதாகவும் கூறுகிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறித்த இறுதி முடிவு இன்னும் ஒரு வாரத்தில் செய்யப்பட இருக்கிறது. ஆகவே, அதற்கு முன்னால் இந்தக் கமிட்டி தன்னுடைய வேலையை முடிக்குமா?

கனம் திரு. வெ. ராமையா : என்னிடம் இருக்கும் விவரம் அதற்கு முன்னதாக முடியும் என்பது.

நிலவரி தள்ளுபடி

***556 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) அரக்கோணம் தாலுகா, நாகவேடு கிராம ரயத்துக் கள் நிலவரி தள்ளுபடி சம்பந்தமாக 10—1—1966 அன்று அரசாங் கத்திற்கு முறையீடு ஏதேனும் அனுப்பியுள்ளார்களா?